பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 146

திங்கட்கிழமை
21 ஏப்ரல் 2025

சித்திரை 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## 31,000 பட்டதாரிகள் அரச சேவையில் உள்ளீர்ப்பு

விரிவு பக்:-03

## தவறான முடிவெடுத்து ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப்.21
தவறான முடிவெடுத்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கைதடி நுணாவிலைச் சேர்ந்த 50 11

## அதிகாரத்தைக் கைப்பற்றவே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்!

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.21
அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகவே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். 11

சங்கிலி அறுத்த குற்றச்சாட்டில்

## பெண் வேடமிட்ட ஆண் உட்பட நால்வர் யாழில் நேற்றுக் கைது



யாழ்ப்பாணம், ஏப்.21
பெண் வேடமணிந்த ஆண் உட்பட இரு ஆண்களும், இரு பெண்களும் சங்கிலி அறுத்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணம், இணுவிலில் உள்ள 11

# குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை!

### ஜனாதிபதியின் உத்தரவின்பேரில் கையளிப்பு
### விசாரணைகளைத் தொடர்கிறது சி.ஐ.டி. சிறப்புக்குழு

**கொழும்பு, ஏப்ரல் 21**

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மேலதிக விசாரணைக்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் உத்தரவுக்கு அமைய ஜனாதிபதியின் செயலாளர் இந்த அறிக்கையை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் கையளித்துள்ளார்.** 11

## ஈஸ்டர் தாக்குதல் நடந்து ஆறு ஆண்டுகள் நிறைவு

### கொல்லப்பட்டோரை நினைவுகூரும் நிகழ்வுகள் நாடுமுழுவதும் ஏற்பாடு

கொழும்பு, ஏப்.21
இலங்கை உட்பட உலகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய மிலேச்சத்தனமான உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடத்தப்பட்டு இன்றுடன் ஆறு ஆண்டுகள் கழிந்துள்ளன.
2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத் 11


திருடுவதற்குத் தடையாக இருந்ததால்

## தும்பளையில் பட்டப்பகலில் மூதாட்டி அடித்துக்கொலை

யாழ்ப்பாணம், ஏப்.21
பருத்தித்துறை, தும்பளையில் பட்டப்பகலில் மூதாட்டி ஒருவர் நேற்று அடித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
தும்பளையில் சகோதரியுடன் 11

## உள்ளூராட்சித் தேர்தலில் ஆர்வம் காட்டாத மக்கள்

### பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்.21
உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் தொடர்பாகப் பொது மக்கள் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.
இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள பவ்ரல் 11

## நிகழ்நிலை காப்புச் சட்டத்தை இரத்துச்செய்யப் பிரேரணை



கொழும்பு, ஏப்.21
நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தை இரத்துச்செய்யக்கோரும் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவால் இந்தத் தனிநபர் பிரேரணை நாடாளு 11




'இதையே இப்பதான் கண்டுபிடிக்கினம் எண்டால் விசாரணை சோக்காத்தான் இருக்கப்போகுது'

## வேட்புமனுக்கள் நிராகரிப்பு வழக்குகள் இன்று விசாரணை

யாழ்ப்பாணம், ஏப்.21
உள்ளூராட்சித் தேர்தலில் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றில் வடக்கிலிருந்து 10 தரப்புகளால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் இன்று விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளன.
யாழ்ப்பாணம் மாநகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை, சாவகச்சேரி நகரசபை, வலிகாமம் தெற்குப் பிரதேசசபை, பருத்தித்துறை பிரதேசசபை, சாவகச்சேரி பிரதேச 11

## மறிக்கமறிக்க மணலுடன் ஓடிய டிப்பரின் மீது துப்பாக்கிச்சூடு!

மன்னார், ஏப்.21
அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளமடுவில் பொலிஸாரின் சமிக்ஞையை மீறிப் பயணித்த டிப்பர் வாகனம் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுத் தடுத்து நிறுத்தப்பட்டது. டிப்பர் வாகனத்தில் சட்ட 11



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 20.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4049
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 33 47 59 71
விசேட எழுத்து E

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 20.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1116
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 20 39 56 57

**NLB ஜய**
திகதி 20.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0075
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 7 7 7 6

**மெகா பவர்**
திகதி 20.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2155
ஆங்கில எழுத்து H
சுப்பர் இலக்கம் 08
வெற்றி இலக்கங்கள் 11 19 70 76

**மஹஜன சம்பத**
திகதி 20.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5807
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 1 8 3 6 9 2

**தன நிதானய**
திகதி 20.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1837
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 18 26 36 53
விசேட எழுத்து G

**அத சம்பத**
திகதி 20.04.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0382
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 3 6 9 2

# 6 வருடங்களுக்குப் பின்பும் வலி; நிச்சயம் நீதிநிலைநாட்டப்படும்!

## உயிர்த்த ஞாயிறுதின வாழ்த்தில் பிரதமர் ஹரிணி தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 21

**ஆறு ஆண்டுகளுக்குப் பிறகும் இன்று வலி அப்படியே உள்ளது. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுடனும், கிறிஸ்தவ சமூகத்துடனும், உண்மையையும் நீதியையும் தொடர்ந்து தேடும் அனைத்து குடிமக்களுடனும் நாங்கள் ஒன்றிணைந்து நிற்கிறோம். ஒரு அரசாங்கமாக, நீதி நிலைநாட்டப்படுவதை உறுதி செய்வதற்கான எங்கள் உறுதிப்பாட்டை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்.**

இவ்வாறு உயிர்த்த ஞாயிறுதின வாழ்த்தில் பிரதமர் ஹரிணி அமரசூரிய குறிப்பிட்டுள்ளார்.

தனது வாழ்த்துச்செய்தியில் அவர்மேலும் குறிப்பிடுகையில், இந்த ஈஸ்டர் பண்டிகை உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் அமைதி, வலிமை மற்றும் ஆன்மீக புதுப்பித்தலைக் கொண்டு வரட்டும். இலங்கையிலும் உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் கொண்டாடும் வேளையில், நம்பிக்கை, புதுப்பித்தல் மற்றும் இரக்கத்தின் நீடித்த சக்தியை நாம் நினைவுபடுத்துகிறோம்.

இன்று, ஆறு ஆண்டுகளுக்குப் பிறகும் வலி அப்படியே உள்ளது. ஒவ்வொரு உயிரின் கண்ணியத்தையும் நிலைநிறுத்தி, அனைவருக்கும் சமத்துவம் மற்றும் நீதி கிடைக்கத் தகுதியான எதிர்காலத்தை நோக்கி உழைப்பதன் மூலம், வலிமையுடனும் ஒற்றுமையுடனும் முன்னேறுவோம்- என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 20.04.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் 0515
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கம் 4 4 1 0 8 1

**Super Ball DLB**
திகதி 20.04.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2781
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கம் 20 23 33 80

**சனிதா DLB**
திகதி 20.04.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கம் 43 45 54 64
வெற்றி வாரம் 4942

**SASIRI DLB**
திகதி 20.04.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் 0666
வெற்றி இலக்கம் 18 28 46

**லக்ன ராசி DLB**
திகதி 20.04.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
துலாம்
வெற்றி இலக்கம் 19 40 58 59
சீட்டிழுப்பு வாரம் 4493

**KAPRUKA DLB**
திகதி 20.04.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து Z
சுப்பர் இலக்கம் 26
வெற்றி இலக்கம் 10 38 63 66
வெற்றி வாரம் 1957

**அத கோடிபதி DLB**
திகதி 20.04.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கம் 02 43 50 51
வெற்றி வாரம் 2607

# கொக்கெய்னுடன் பிரேசில் பிரஜை கைது

கொழும்பு, ஏப். 21

சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு தொகை கொக்கெய்னுடன் ஒருவரை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் நேற்று கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் பிரேசில் நாட்டைச் சேர்ந்த 29 வயதானவராவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த நபரிடம் 4 கிலோகிராம் 855 கிராம் கொக்கெய்ன் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அதன் மதிப்பு 240 மில்லியன் ரூபா எனவும் சுங்க அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் பொதியையும் சந்தேகநபரையும் மேலதிக விசாரணைக்காக கட்டுநாயக்க விமானநிலையப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# உண்மையைக் கண்டறிவதற்கு வேற்றுமைகளைக் களைவோம்

## சஜித் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 21


குறுகிய அரசியல் நோக்கங்களைத்தள்ளிவைத்து உண்மையைக் கண்டறிவதற்காக அணிதிரளுவோம் என உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அனுப்பிவைத்துள்ள உயிர்த்த ஞாயிறு தின வாழ்த்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கடவுளின் குமாரனாகக் கருதப்படும் இயேசு கிறிஸ்து மரணத்தை வென்று உயிர்த்தெழுந்ததை நினைவுகூரும் வகையில், உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்களைப் போலவே, எமது நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களும் உயிர்த்த ஞாயிறுதினத்தை உற்சாகத்துடன் கொண்டாடுகின்றனர். ஆனால், 2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் தினத்தன்று எமது நாட்டில் கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் சில ஹோட்டல்களை இலக்குவைத்து நடத்தப்பட்ட அந்த மனிதாபிமானமற்ற தற்கொலைத் தாக்குதலால் இன்றும் எமது நாட்டின் கத்தோலிக்க மக்கள் பெரும் துயரத்தில் உள்ளனர்.

6 ஆண்டுகள் கடந்தும், இந்தத் தாக்குதலில் உயிரிழந்த, கைகால்களை இழந்த, உறவினர்களையும் நண்பர்களையும் இழந்த மக்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை.

எனவே, வீண்பேச்சுகளையும், பொய் வாக்குறுதிகளையும் தவிர்த்து, இந்தத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் நீதிகிடைக்க அனைவரும் செயற்படவேண்டும்- என்றார். (ச-இ)



# இராமர் பாலத்தின் அருகே இலங்கை சுற்றுலாத்திட்டம்

## இந்திய ஊடகம் செய்தி

கொழும்பு, ஏப். 21

இந்தியாவின் ராமேஸ்வரம் மற்றும் தனுஸ்கோடிக்கு அருகிலுள்ள இராமர் பாலம் என்று கருதப்படும் இடங்களில் இலங்கை தமது சுற்றுலாவை மேம்படுத்த திட்டங்களை வகுத்துள்ளதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுற்றுலா மேம்பாட்டுக்காக சில மணல் திட்டுக்களை தனியார் பயன்படுத்தவும் இலங்கை அரசாங்கம் அனுமதித்துள்ளதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தத் திட்டம், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம் என்றும் இந்த விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் இதுவரை எந்தத் தகவலும் வெளியிடவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கேகாலை, ஏப். 21

மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். பெண் ஒருவர் உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து கேகாலையில் மாவனெல்லை ஹெம்மாத்தகமவீதியில்நேற்று இடம்பெற்றுள்ளது என மாவனெல்லைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கா வரி விவகாரம்

# வொஷிங்டனுக்கு நாளை இலங்கைக் குழு பயணம்

கொழும்பு, ஏப். 21

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள புதிய பரஸ்பர வரி குறித்து கலந்துரையாடுவதற்கு இலங்கை பிரதிநிதிகள் குழு நாளை 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வொஷிங்டனுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாக தொழில் அமைச்சர் அனில் ஜயந்த குறிப்பிட்டார்.

குறித்த குழ அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி களுடனான பேச்சுகளின்போது வரிகளைக் குறைத்தல் மற்றும் இறக்குமதியை அதிகரித்தல் போன்ற விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளது. தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்க வர்த்தகத் திணைக்களத்தின் பணிப்பாளர் எமிலி ஆஷ்பி மற்றும் உதவிப் பணிப்பாளர் பிரெண்டன் லிஞ்ச் ஆகியோருடன் இலங்கைப் பிரதிநிதிகள் கடந்த வாரம் மெய்நிகர் ஊடான கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர். இதில் ஏற்பட்ட முன்னேற்றங்களின் அடிப்படையிலேயே இலங்கைப் பிரதிநிதிகள் அமெரிக்கா செல்கின்றனர்.

இதேவேளை அமெரிக்காவுக்கு இலங்கை ஏற்றுமதிசெய்யும் பொருள்களுக்கு 44 சதவீத வரியை ட்ரம்ப் ஆரம்பத்தில் விதித்திருந்தார்.

64 சதவீத ஆடையுற்பத்திகளை உள்ளடக்கிய ஏற்றுமதிகள் 2023 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 1.8 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியைக் கொண்டிருந்தன. எனவே, அமெரிக்காவின் புதிய வரிவிதிப்பினால் இலங்கையின் ஆடைக்கைத்தொழில் துறை பெரும் தாக்கத்தை எதிர்கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)


## 31,000 பட்டதாரிகள் அரச சேவையில் உள்ளீர்ப்பு

கொழும்பு, ஏப். 21

31 ஆயிரம் பட்டதாரிகளை அரச சேவையில் சேர்ப்பதற்காக 10 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் நகர அபிவிருத்தித்திட்டத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் பங்கேற்றுப் பேசியபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பட்டதாரிகள் போட்டிப் பரீட்சைகள்மூலம் வேலைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். இதேவேளை 2 ஆயிரம் பொலிஸ் அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)



## நாட்டில் பரவிவருகிறது டெங்கு, சிக்குன்குனியா

கொழும்பு, ஏப். 21


நாட்டின் பல பகுதிகளில்பெய்து வரும் மழை காரணமாக டெங்கு மற்றும் சிக்குன்குனியா பரவும் அபாயம் அதிகம் காணப்படுவதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

டெங்குவைப் பரப்பும் நுளம்புகள் மூலமாகவும் சிக்கன்குன்யா பரவுவதாகவும் இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் செயலாளர் சமில் முத்துக்குடா தெரிவித்துள்ளார். இதன் காரணமாக, சுற்றுப்புறத்தைத் தொடர்ந்து சுத்தம் செய்வதன் மூலம் நுளம்புகளின் பெருக்கத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## சூதாட்டத்தில் தகராறு இளைஞன் கொலை

சூதாட்டத்தின்போது ஏற்பட்ட கைகலப்பில் இளைஞன் ஒருவர் பொல்லுகளால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம், ஆனமடுவ, வடத்த, ஹல்மில்லேவப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இளைஞனை பொல்லுகளால் அடித்துக் கொலை செய்தனர் என்றக் குற்றச்சாட்டில், பெண் உட்பட இருவர் சந்தேகத்தின் பேரில், கைதுசெய்யப்பட்டுள்ளனர் என ஆனமடுவப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



## தமிழரசுக்கட்சியின் தேர்தல் அலுவலகம் திறப்பு!

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பிரதேச தேர்தல் காரியாலயம் வவுனியா மாகறம்பைக்குளம் பிரதான வீதியில் திறந்து வைக்கப்பட்டது இதன்போது வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம், கட்சியின் முக்கியஸ்தர் ந.கருணாநிதி மற்றும் வேட்பாளர்கள் ஆதரவாளர்கள் கலந்துகொண்டிருந்தனர். (ச-33-110)

## புதிய நுளம்பு இனம் இலங்கையில் கண்டறிவு

கொழும்பு, ஏப். 21

இலங்கைக்கே உரித்தான புதிய நுளம்பு இனமொன்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பூச்சியியல் நிபுணர் கயான் குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த புதிய நுளம்பு இனம் மீரிகமப் பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த நுளம்புக்கு கியூலெக்ஸ் லொபசெரோமியா சின்டெக்லஸ் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

குறித்த நுளம்பு இனம் ஒரு பிரதான வைரஸ் கடத்தியாக அடையாளங் காணப்பட்டுள்ளதாகவும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பூச்சியியல் நிபுணர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)




வடக்கு முழுக்க இப்ப கடும் வெக்கை. வெளியால ஆரும் தலைகாட்டவே ஏலாத அளவுக்கு வெக்கை போட்டுத்தாக்குது. வழக்கமா வெயில் வெக்கையைத் தாங்கிறதுக்கு இயற்கையே எங்களுக்கு சில விசயங்களைத் தந்திருக்குது. அதில முக்கியமானது வெள்ளரிப்பழம். யாழ்ப்பாணத்தில வெள்ளரிப்பழத்துக்கு சண்டிலிப்பாய் கடும் பேமஸ். அந்த வயல் வெளிக்குள்ள விளையிற வெள்ளரிப்பழமெண்டா கண்ணைமூடிக்கொண்டு எல்லாரும் வாங்கிக்கொண்டு போவினம். வெள்ளரிப்பழத்தை வயலில இருந்து பிடுங்கினால் கனநேரம் தாக்குப் பிடிக்காது. வெடிச்சு உள்ளுக்க இருந்து கசிஞ்சு, தண்ணியா ஓடத்தொடங்கிடும். நேரம் போகப் போக அப்பிடியே அழுகிடும். அதால அதை பனையோலையால செய்த குடலைக்குள்ள சுத்திக்கட்டித்தான் விக்கிறவை. அப்பதான் அதுவும் வெக்கையைத் தாங்கி, வெள்ளரிப்பழத்தை வெடிக்கவிடாமல் வைச்சிருக்கும். அதோட இந்தப் பனையோலைக் குடலைக்குள்ள கட்டிவைச்சால் வெள்ளரிப்பழத்துக்கு தனியொரு வாசமும் இருக்கு.

ஆனால் இதெல்லாம் இப்பத்தை ஆக்களுக்குத் தெரியாதே. அவையள் பனையோலையோட வைச்சால், வடிவிருக்காது எண்டு அதை அவிட்டுப் போட்டுத்தான் விக்கினமாம். அதால வெள்ளரிப் பழங்கள் கெதியாப் பழுதாகுது எண்டு வாங்கிக் கொண்டுபோற ஆக்கள் ஒரே முறைப்பாடு. இன்னும் சில இடங்களில குடலையை அவிட்டு எறிஞ்சு போட்டு, சொப்பிங் பையுக்கயும் போட்டுக்குடுக்கினம். சும்மாவே சொப்பிங் பை வெக்கையைக் கூட்டுற சாமான். அதுக்குள்ள வெள்ளரிப்பழத்தை வைச்சால், இன்னும் கெதியாப் பழுதாப்போடு மெல்லோ.

பழங்களை விக்கிற சிலர் தாங்கள் விரும்பி இப்பிடிச் செய்யிறேலை எண்டு சொல்லுகினம். பி.எச்.ஐ.மார்தான் வெள்ளரிப்பழத்தை பனையோலையில கட்டிக்குடுக்ககூடாது, பனையோலையில என்னென்ன கிருமி இருக்கோ தெரியேலை, அதால கட்டிக்குடுத்தால் வருத்தங்கள் வந்திடும் எண்டு சொல்லுகினமாம். பனையோலையைவிட சொப்பிங் பைதானே உடம்புக்குக் கூடாது? அதால தானே சொப்பிங் பையை அரசாங்கம் தடைசெய்தது. அப்பிடி தடைசெய்யப்பட்ட சொப்பிங் பையில குடுக்கலாம், ஆனால் பனையோலையில கட்டிக் குடுக்கக்கூடாது எண்டுறது என்ன நியாயம் எண்டு தெரியேலை. எங்கட பழைய ஆக்கள் எல்லா விசயங்களையும் காரணகாரியங்களோடதான் செய்தவை. முக்கியமா அவையின்ர சாப்பாட்டு முறைக்கு ஆரும் கிட்ட நிக்கேலாது. அதாலதான் அவை எழுபது, எண்பது வயது தாண்டியும் வேலை செய்யிற அளவுக்கு உடம்பை திடமா வைச்சிருந்தவை. அதுகளை மாத்தவெளிக்கிட்டுத்தான் இப்ப இருபது வயதிலையே எல்லாரும் நோஞ்சானாப் போட்டம். அப்பிடி அவையின்ர முறையில ஒண்டுதான் பனையோலைக் குடலைக்குள்ள வெள்ளரிக்காயை வைச்சு விக்கிறது. சூழலுக்கும் நல்லது, உடம்புக்கும் நல்லது, வெள்ளரிக்கும் நல்லது. உதுகளைத் தெரியாமல் சும்மா எல்லாத்துக்கும் ரூல்ஸை தூக்கிப்பிடிக்காமல் நடைமுறை விசயங்களையும் கொஞ்சம் யோசியுங்கோ அதிகாரியளே!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். பிற்பகலுக்கு மேல் நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.

**இடபம்:** பிற்பகலுக்குமேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். எதிரிகள் பணிந்து வருவார்கள். பிறருக்குக் கொடுத்து வராமல் இருந்த கடன் தொகை கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**மிதுனம்:** உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர் பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நி ல் வீட்டில் உற்சாக மான சூழ்நிலை ஏற்படும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனாலும், புதிய முயற்சி களில் ஈடுபடுவதைத் தவிர்த்துவிடுவது நல்லது. பிற்பகலுக்குமேல் வாழ்க்கைத்துணைவழி உறவி னர்களால் செலவுகள் ஏற்படும். இளைய சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள் வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் சக வியாபாரிகளால் சிறு சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**கன்னி:** குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். கணவன் மனைவிக்கிடையே சிறு சிறு பிரச்னைகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவ னம் செலுத்தவும். வியாபாரம் வழக்கம்போலவே இருக்கும்.

**துலாம்:** உற்சாகமாகச் செயல்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவை களை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும் என்பதால், கையிருப்பு கரையும். வாழ்க்கைத்துணை உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். முக்கியமான முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்க வேண்டாம். பிள்ளைகள் வழியில் தேவையற்ற சில பிரச்னைகள் ஏற்பட்டு சங்கடம் தரக்கூடும்.

**தனுசு:** அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். சிலருக்கு திடீர் பண வரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவி இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல் வது நல்லது.

**மகரம்:** உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளை களால் செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்து ணையுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால், அனுசரித்துச் செல்வது நல்லது.

**கும்பம்:** தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும் கண வன் மனைவிக்கிடையே வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப் பிடிப்பது நல்லது.

**மீனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண் டாகும். வாழ்க்கைத்துணை உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வார். பிற்பகலுக்கு மேல் சகோதரர் களால் சில பிரச்னைகள் ஏற்பட்டு நீங்கும்.

ரோஹித், சூர்யா அரைச்சதம்

# சென்னையை எளிதாக சுருட்டியது மும்பை

**ஐ.பி.எல். தொடரின் 38 ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை அணியை 9 விக்கெட்டுக்களால் வெற்றிகொண்டது மும்பை இந்தியன்ஸ் அணி.**

மும்பை, வான்கடே மைதானத்தில் இந்த ஆட்டம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்ப வீரராகக் களமிறங்கிய ரச்சின் ரவீந்திரா 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஷேக் ரஷீத் 19 ஓட்டங்களுடன் வெளியேறினார். அறிமுக வீரரான ஆயுஷ் மாத்ரே அதிரடியாக ஆடி 32 ஓட்டங்கள் சேர்த்தார். 4ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ஜடேஜாவும், ஷிவம் துபேயும் 79 ஓட்டங்களை இணைப்பாட்டமாகச் சேர்த்தது. ஷிவம் துபே 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஜடேஜா ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்கள் எடுத்தார். ஏனைய எவரும் சோபிக்கவில்லை.

177 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய மும்பை இந்தியன்ஸ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ரிக்கல்டன் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மற்றொரு ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ரோஹித் சர்மா ஆரம்பம் முதல் அதிரடியாக ஆடினார். அவருடன் சூர்யகுமார் யாதவ் சிறந்த இணைப் பாட்டத்தை வழங்கினார். இருவரும் அரைச்சதம் கடந்தனர்.

15.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 177 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றியைப் பதிவு செய்தது மும்பை இந்தியன்ஸ் அணி.



ரோஹித் சர்மா 76 ஓட்டங்களுடனும், சூர்யகுமார் யாதவ் 68 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தனர்.

இந்த வெற்றி மும்பை அணிக்குக் கிடைத்த 4 ஆவது வெற்றியாகும். சென்னையின் அணியின் 6ஆவது தோல்வி இதுவாகும். (எ-இ)

# பஞ்சாப்பை வீழ்த்தி பெங்களூர் அபாரம்



ஐ.பி.எல். தொடரின் 37 ஆவது லீக் ஆட்டத்தில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி, பஞ்சாப் கிங்ஸ் அணியை 7 விக்கெட்டுக்களால் வெற்றிகொண்டது.

இந்த ஆட்டம் நேற்று பஞ்சாபின் முல்லன்பூரில் உள்ள மகாராஜா யாதவிந்திர சிங்க சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக பிரப்சிம்ரன் சிங் 33 ஓட்டங்களையும், ஷஷாங்க் சிங் 31 ஓட்டங்களையும், ஜோஷ் இன்கில் 29 ஓட்டங்களையும் பெற்றனர். பெங்களூர் அணி சார்பாகப் பந்துவீச்சில் குருனல் பாண்டியா மற்றும் சுயாஷ் சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், ரொமாரியோ ஷெப்பர்ட் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

158 என்ற இலக்கை நோக்கிக் களமிறங்கிய பெங்களூர் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பிலிப் சால்ட் ஒரு ஓட்டம் பெற்றிருந்தபோது ஆட்டமிழந்தார். ஆயினும் அதன்பின்னர் விராட் ஹோலி மற்றும் தேவ்தத் படிக்கல் இணை அதிரடியாக விளையாடி அணியை வெற்றியை நோக்கி நகர்த்தியது. இருவரும் 103 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர்.

தேவ்தத் படிக்கல் 61 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். விராட் ஹோலி ஆட்டமிழக்காமல் 73 ஓட்டங்களைப் பெற்றார், ராஜத் பட்டித்தார் 12 ஓட்டங்களும், ஜிதேஷ் சர்மா 11 ஓட்டங்களும் எடுத்தனர். 18.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் பெங்களூர் அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்கள் பெற்று வெற்றியீட்டியது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

ஒரு நகரம் நல்ல சட்டங்களினால் ஆளப்படுவதைவிட நல்ல ஒருவரால் ஆளப்படுவதே மேலானது.


– அரிஸ்ரோட்டில் –

# இருண்ட காலத்தின் இழுத்தடிப்புகள்

2021 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறன்று இலங்கையில் உள்ள சில கிறிஸ்தவத் தேவாலயங்களிலும், விடுதிகளிலும் வெடித்த குண்டுகள், ஒட்டுமொத்த நாட்டையும் அதிரவைத்தன. ஐந்து வருடங்கள் கடந்தும் அந்த அதிர்வலைகள் இன்னும் அடங்கவில்லை. அத்தோடு இந்தத் தாக்குதலின் சூத்திரதாரிகள் யார் என்ற மர்மமுடிச்சும் இன்னும் அவிழவில்லை. இந்தநிலையில், இந்த வருடம் உயிர்த்த ஞாயிறு தினத்துக்கு முன்னதாக, தாக்குதலின் சூத்திரதாரிகளை இனங்காட்டுவோம் என்று ஜனாதிபதி அநுரகுமார சூளுரைத்திருந்தார். ஆனால் இப்போதோ விசாரணை வெற்றிகரமாக நடைபெறுவதாகவும், முன்பு பேசாதவர்கள் இப்போது முன்வந்து வாக்குமூலம் அளிப்பதாகவும் கூறுகிறார். இதேபோன்ற விசாரணைக் கதைகளைத்தானே கடந்தகால அரசுகளும் மக்களுக்குச் சொல்லி, காலத்தைக் கடத்தின. அதேபாதையில் மக்களை மந்தைகளாக்கும் வேலையைத்தான் இந்த அரசாங்கமும் செய்யப்போகின்றதா என்ற சந்தேகமும் எழுகின்றது.

கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதிக் கதிரையில் இருத்தவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அப்போதையை புலனாய்வுப் பிரிவின் தலைவர் சுரேஷ் சாலேதான் இந்தத் தாக்குதலின் சூத்திரதாரியாகச் செயற்பட்டார் எனவும், பிள்ளையானும் ஒரு கருவியாக இருந்தார் எனவும் அசாத் மௌலானா சனல்-4 க்கு வழங்கிய வாக்குமூலத்தில் கூறியிருந்தார். ஆனால், கோத்தாபய, சுரேஷ் சாலே, பிள்ளையான் போன்றோர் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்களா? இல்லை. இப்போது பிள்ளையான் கைதுசெய்யப்பட்டிருந்தாலும், இது ஒரு நாடகமாக மட்டுமே முடியுமோ என்ற அச்சம் உள்ளது. உண்மையில், இந்தத் தாக்குதலுக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்பதை முழுமையாக வெளிக்கொணர, ஒரு சுதந்திரமான சர்வதேச விசாரணை தேவை. அப்போதுதான் அரசியற் சார்பின்றி, காய்தல் உவத்தலின்றி விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கலாம். ஆனால் அதற்கு, இதற்கு முன்னிருந்த அரசாங்கங்களும் தயாராகவில்லை, தேசிய மக்கள் சக்தியும் தயாராகவில்லை. காரணம், ஈஸ்டர் தாக்குதலுக்கு வெளியக விசாரணையைக் கோரினால், இறுதிப் போர்க்குற்றங்கள் தொடர்பிலும் வெளியக விசாரணைக்கு சம்மதிக்கவேண்டிய கட்டாயம் வந்துவிடும். அதற்காகத்தான் ஈஸ்டர் தாக்குதல் விசாரணையை 'இன்ரபோல்' போன்ற அமைப்புகளிடம் கொடுக்காமல், நாமே விசாரணை செய்வோம் என்று இலங்கை விடாப்பிடியாக நிற்கின்றது. தனக்குக் கண் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனம் சரியில்லாமல் போனால் போதுமென்ற இந்த மனதுக்கு மருந்து ஒருபோதுமில்லை.

இன்று, ஜனாதிபதி காலதாமதம் பற்றிப் பேசுகிறார். ஆனால், இந்தக் காலதாமதம்தான் இதுவரை உண்மையை மூடிமறைத்துவிட்டது. பலியாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் இன்னும் நீதிக்காகக் காத்திருக்கின்றன. அவர்களுக்கு விடை கிடைக்குமா? அல்லது இந்த விசாரணையும் மற்றவற்றைப் போலவே மண்ணில் மூடப்படுமா? நீதி என்பது வெறும் வார்த்தைகளில் அல்ல, செயல்களில்தான் இருக்கவேண்டும். இல்லையென்றால், இந்த நாடு மீண்டும் ஓர் இருண்ட காலத்துக்குத் தயாராக வேண்டியதுதான்.




# ஆசாத் மௌலானாவிடம் விசாரணை செய்யுங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 21

உயிர்த்த ஞாயிறுத்தாக்குதல் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிப்பதற்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் செயலாளர் ஆசாத்மௌலானாவை விசாரணை செய்யவேண்டும் என கொழும்பு மறைமாவட்ட தொடர்பாடல் இயக்குநர் அருட்தந்தை ஜுட் கிருசாந்த வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சனல் 4 ஆவணப்படத்துக்கு தகவல்களை வழங்கிய ஆசாத்மௌலானாவை விசாரணை செய்தால் பல விவரங்கள் இதுதொடர்பில் தெரியவரலாம். கத்தோலிக்க சமூகத்தினரும் இலங்கையர்களும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிக்காகக் காத்திருக்கின்றனர். னாதிபதி இந்தத் தாக்குதல்கள் குறித்த உண்மைகளை வெளிப்படுத்துவார் விசாரணைகளை முன்னெடுத்துச்செல்வார் என அவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகள் குறித்து திருப்தி அடைகிறோம். எனினும் இன்னமும் வேகமாக விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும்- என்றார். (ச-இ)

# 15 மாவட்டங்களுக்கு வெப்ப எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 21

வடக்கு, வடமத்திய, வட மேற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் சில இடங்களில் மனித உடலில் உணரப்படும் வெப்பநிலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. எனவே, வெளிப்புறங்களில் வேலையின்போது அதிகளவு தண்ணீர் குடிப்பதும், நிழலான பகுதிகளில் முடிந்தவரை ஓய்வெடுப்பதும் அவசியம் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# 50 வழக்குகள் தாக்கல் அரசாங்கம் நடவடிக்கை

நீண்டகாலமாக நடைபெற்றுவரும் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணைகள் தொடர்பாக விரைவில் 50 வழக்குகளைத் தாக்கல்செய்ய, கையூட்டல் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையகம் நடவடிக்கை எடுத்துள்ளது. கொழும்பு மேல் நீதிமன்றத்தில், இந்த வழக்குகளுக்கான குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்படவுள்ளன. (ச-இ)



## பாதாளக்குழுவினர் ஐந்து பேர் கைது!

கொழும்பு, ஏப். 21

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத் தலைவரான கெஹெல்பத்தர பத்மேவுடன் தொடர்புடைய ஏழு சந்தேகநபர்கள் சிறப்புப் பணிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கம்பஹாவில் நடத்தப்பட்ட சோதனையின் போது அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். இதன்போது இரண்டு சந்தேகநபர்கள் முதலில் இரண்டு துப்பாக்கிகளுடன் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், அதே கும்பலுடன் தொடர்புடைய மேலும் ஐந்து சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# ரவி கருணாநாயக்கவால் தனிநபர் பிரேரணை

கொழும்பு, ஏப்.21

தேசிய ஜனநாயக முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் துணைத்தலைவருமான ரவி கருணாநாயக்க இன,மத அடையாளத்தை குறிக்கும் பெயர்களுடன் செயற்படும் அரசியல் கட்சிகளை தடை செய்ய வேண்டுமென தனிநபர் பிரேரணையொன்றைக்கொண்டு வந்துள்ளார்.

தற்போது இன,மத அடையாளத்தை குறிக்கும் பெயர்களுடன் செயற்படும் அரசியல் கட்சிகளும் தமது பெயர்களில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென அவர் தனது பிரேரணையில் குறிப்பிட்டுள்ளார். (ச-6)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை செவ்வாய்க்கிழமை - சித்திரை 09
22.04.2025
சுப நேரம் : 10.31 - 12.01
ராகுகாலம் : 03.01 - 04.31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகளை கண்டறிவது அவசரமான விடயம்

## இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை தெரிவிப்பு

**கொழும்பு, ஏப்.21**

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் முக்கியமான சூத்திரதாரிகள், அந்தத் தாக்குதலுக்கு உதவியவர்கள் யார் என்பதைக் கண்டறிவது அவசரமான விடயம் என்று இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை தெரிவித்துள்ளது.**

உயிர்த்த ஞாயிறு தொடர்பாக விடுத்துள்ள விசேடசெய்தியில் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை இவ்வாறு தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத்துடன் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெற்று ஆறு வருடங்களாகின்றன.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக சுயாதீனமான, பக்கச்சார்பற்ற விசாரணைகளை உறுதி செய்வதற்காக அரசாங்கம் சில சாதகமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகளை நாங்கள் வரவேற்கும் அதேவேளை விசாரணையின் இறுதி நோக்கம் குற்றவாளிகள் யார், அவர்களுக்கு உதவியவர்கள் யார் என்பதை வெளிப்படுத்துவதாக இருக்கவேண்டும் என்று இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை வலியுறுத்தியுள்ளது. (எ-இ)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.21

யாழ்ப்பாணம், நல்லூர், வடக்குச் சட்டநாதர் வீதி, கொன்றையடி திருவருள்மிகு வைரவப்பெருமான் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது.

பத்து நாள்கள் காலை 9மணிக்கும் மாலை 7மணிக்கும் அலங்கார உற்சவப் பூஜைகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத்திருவிழாவும், 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 28ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ச-41)

# மஹிந்தவின் காலத்திலேயே கிழக்கில் பெரும் அபிவிருத்தி

## நாமல் ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.21

மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்திலேயே கிழக்கு மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்திகளைச் செய்து காட்டினோம். தற்போது கிழக்கு மாகாணத்தில் அனைத்து அபிவிருத்திகளும் தடைப்பட்டுள்ளன.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

திருகோணமலை மாவட்டம் அதி உச்ச அபிவிருத்திகளை மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்திலேயே அடைந்தது. அதை யாரும் மறுக்கமுடியாது. எமது எதிர்கால ஆட்சியில், இந்த மாவட்டத்தின் அபிவிருத்திக்கு, முன்னுரிமை வழங்குவோம்.

கிராமங்களை அபிவிருத்தி செய்கின்ற ஒரு தேர்தலை நாங்கள் எதிர்நோக்கி இருக்கின்றோம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில், திறமையான, நேர்மையான இளைஞர் யுவதிகளை களம் இறக்கியுள்ளோம். உங்கள் கிராமத்துக்குப் பொருத்தமான தலைவர்களை வாக்களித்துத் தெரிவுசெய்யுங்கள்-என்றார். (எ-இ)

# செயலி நடைமுறையால் தபால் திணைக்களத்துக்கு இழப்பு

கொழும்பு, ஏப்.21

போக்குவரத்து அபராதங்களை அறவிடுவதற்கு "GovPay" செயலி அறிமுகப்படுத்தப்பட்டதால் தபால் திணைக்களம் கணிசமான வருவாய் இழப்பைச் சந்தித்துள்ளது என்று தபால் தொழிற்சங்க முன்னணி தெரிவித்துள்ளது. தபால் திணைக்களம் ஏற்கனவே தபால் நிலையங்களில் அபராதம் செலுத்தும் நபர்களுக்கு குறுஞ்செய்தி அறிவிப்பு முறையைப் புதிதாக அறிமுகப்படுத்தியிருந்தது. ஆனாலும் போக்குவரத்து அபராதங்களுக்கான புதிய டிஜிட்டல் கட்டண முறைமை தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த மாற்றத்தால் தபால் திணைக்களத்தின் ஆண்டு வருவாயில் 600 மில்லியன் ரூபா முதல் 800 மில்லியன் ரூபா வரை இழக்க வேண்டியுள்ளது.

அபராதம் செலுத்திய நபருக்கும், சம்பந்தப்பட்ட போக்குவரத்துப் பொலிஸ் அதிகாரிக்கும் குறுஞ்செய்தி அனுப்பும் வகையில் தபால் திணைக்களத்தால் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவுள்ளது. பொலிஸ் தரப்பின் பதில் கிடைக்காததால் அது செயற்படுத்தப்படவில்லை.

தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதை எதிர்க்கவில்லை. ஆயினும் தபால் திணைக்களத்தால் வடிவமைக்கப்பட்ட குறுஞ்செய்தி அபராதமுறைமையைச் செயற்படுத்தவேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். "GovPay" நிகழ்நிலை போக்குவரத்து அபராதம் செலுத்தும் முறை ஒரு முன்னோடித்திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால்,

அதில் குறுஞ்செய்தி அபராதமுறையைத் திருத்தி ஒருங்கிணைக்கவேண்டும் என்று தபால் தொழிற்சங்க முன்னணி வலியுறுத்தியுள்ளது. (எ-இ)

# நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஏப்.21

கிராமிய உழைப்பாளர் சங்கம் மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், மரியநாயகம் நியூட்டனின் 'காட்டிக் கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்' என்ற நூலின் அறிமுக நிகழ்வு, வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெற்றது. சங்கத்தின் தலைவர் என்.இன்பம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக உலக மீனவ சம்மேளத்தின் பொதுச்செயலாளர், சிறப்பு விருந்தினராக யாழ், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொ.கஜேந்திரகுமார், கௌரவ விருந்தினராக தேசிய பெண்கள் திட்ட இணைப்பாளர் செல்வி சுபாயினி கமலநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர் நூலின் ஆய்வுரைகளை வடமாகாண கடற்றொழில் இணையத்தின் உறுப்பினர் அன்னலிங்கம் அன்னராசா, வடக்கு மாகாண பெண்கள் குரலமைப்பின் உறுப்பினர் ஆகியோர் ஆற்றினர். (ச-25,27)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் 6,508 பேருக்கு ஓய்வூதியம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது 6 ஆயிரத்து 508 பேர் ஓய்வூதியம் பெற்றுவருகின்றனர். எமது மாவட்டம் ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தலில் தேசிய ரீதியாக தொடர்ச்சியாக 11 ஆண்டுகள் முதலிடம் பெற்றுவருகின்றது என்று யாழ். மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார். யாழ். மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்தவர்களின் புலமைப் பரிசில் சித்திய டைந்த பிள்ளைகள், கல்விப் பொதுத் தராதர சாதாரணம் மற்றும் உயர்தரத்தில் அதிசிறந்த சித்தி அடைந்தவர்களுக்கும் ஊக்குவிப்புப் பணப்பரிசில் வழங்கப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிகழ்வில் சமூகப் பாதுகாப்புச் சபையின் தவிசாளர் எம்.கே.பி. திசநாயக்க பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். (ச-22,66)

யாழ்.மாவட்டச் சமுர்த்தி அலுவலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் வளர்ச்சி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு நிகழ்வு யாழ். மாவட்டச்செயலர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. யாழ். மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எப்.சி.சத்தியசோதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன், சமுர்த்தி முகாமையாளர் மற்றும் சமுர்த்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கிளிநொச்சியில் 66 பேர் தெரிவுக்கு 659 பேர் களத்தில்

கிளிநொச்சி, ஏப். 21

கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று பிரதேசசபைகளிலும் 66 பேரைத் தெரிவு செய்வதற்காக 659 பேர் போட்டியிடுகின்றனர் என மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் வே.சிவராஜா தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தில் 102,387 பேர் உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர். கரைச்சிப் பிரதேசசபையில் 35 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக 342 பேரும் பச்சிலைபள்ளிப் பிரததேசசபையில் 13 பேரைத் தெரிவு செய்வதற்காக 128 பேரும் பூநகரிப் பிரதேசசபையில் 18 பேரைத் தெரிவுசெய்வதற்காக 189 பேரும் போட்டியிடுகின்றனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச- 25,113)

# மன்னார் மறைமாவட்டத்தில் ஈஸ்டர் நள்ளிரவுத் திருப்பலி

மன்னார், ஏப். 21


இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா நள்ளிரவுத் திருப்பலி மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 11.15 மணிக்கு இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து திருவிழாத் திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

மன்னார் மறைமாவட்டத்திலுள்ள பல்வேறு ஆலயங்களிலும் நள்ளிரவுத் திருப்பலி இடம்பெற்றதுடன் தேவாலயங்களுக்குப் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. (ச-41-56,60)









# விசுவாவசு தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள் - 2025




## நல்லநேரம் ஆரம்பம்

**துலாம் ராசிக்காரர்களுக்கு,**

மனதில் பட்டதை பளிச்சென்று பேசி, சுற்றியிருப்பவர்களின் மனதில் ஆழமாக இடம்பிடிப்பவர்கள் நீங்கள். உங்கள் ராசியிலேயே விசுவாவசு தமிழ்ப் புத்தாண்டு பிறப்பதால் உங்களின் ஆளுமைத்திறன் அதிகரிக்கும். இனி உங்களின் வாழ்க்கைப் பாதையைச் சீராக அமைத்துக் கொள்ள நல்ல வாய்ப்புகள் அமையும். பக்குவமாகப் பேசி பல காரியங்களை கச்சிதமாக முடிப்பீர்கள். கணவன் மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

ஒருவரையொருவர் புரிந்து கொண்டு வாழ்வீர்கள். எனினும் எதிலும் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். பேச்சில் நிதானத்தைக் கடைபிடியுங்கள். வீட்டில் தடைபட்ட சுபகாரியமெல்லாம் இனி அடுத்தடுத்து நடக்கும்.

மே மாதம் 14ஆம் திகதியிலிருந்து குருபகவான் உங்களுக்கு சாதகமாக வருவதால் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற நிலை உருவாகும். புதுமுயற்சி கள் வெற்றிதரும். விலையுயர்ந்த தங்க நகைகள் வாங்குவீர்கள். போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள். வெளிநாட்டுப் பயணம் உண்டு. அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிட்டும்.

எதிர்காலத்தை மனதிற் கொண்டு சேமிப்பை கொஞ்சம் அதிகப்படுத்துவீர்கள். எதார்த்தமான பேச்சால் தள்ளிப்போன காரியங்களைக்கூட முடித்துக்காட்டுவீர்கள். எனினும் முக்கிய வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் முடிந்தவரை நீங்களே முடிக்கப்பாருங்கள். அடிக்கடி [illegible]

எவ்வளவு பிரச்சினை வந்தாலும் அதை எதிர்கொள்ளும் பக்குவம் வேண்டும். நடந்தது நடந்துவிட்டது என்று கடந்து செல்லுங்கள். வெற்றி நிச்சயம்.

குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். தாம்பத்யம் இனிக்கும். கணவர் வழி சொந்தங்களால் மதிக்கப்படுவீர்கள். வீட்டிலிருந்தபடியே சுயதொழில் செய்து இலாபமீட்டுவீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். கசந்த காதல் இனிக்கும். தள்ளிப் போன கல்யாணம் கூடிவரும். பெற்றோர் உங்களின் விருப்பங்களை நிறைவேற்றுவார்கள். மறதி, மந்தம் விலகும். இனி படிப்பில் அக்கறை காட்டுவார்கள். தெரியாதவற்றை ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

அதிரடி இலாபம் கிடைக்கும். ராகு கேதுவின் சஞ்சாரப்படி மே மாதத்துக்குப் பிறகு வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும்.

உத்தியோகத்தில் உங்களுக்கான அங்கீகாரம் கிடைக்கும். அதிக சம்பளத்துடன் பெரிய நிறுவனத்திலிருந்து வாய்ப்புகள் தேடி வரும். அரசாங்கத்தால் பரிசு, பாராட்டுக் கிட்டும். உங்களின் புதிய சிந்தனைக்கு மக்கள் அங்கீகாரம் கொடுப்பார்கள். பெரிய வாய்ப்புகள் வரும்.

**மொத்தத்தில் இந்தத் தமிழ்ப் புத்தாண்டு உங்களின் தரத்தை ஒருபடி உயரச் செய்வதாக அமையும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 08 . 1944



மறைவு 20 . 04 . 2025

## பரமசாமி செட்டியார் செல்வநாதன் செட்டியார்

(ஸ்தாபகர் R.S. Printers Jaffna, Past President Rotary club of Jaffna, Old boy St john's College, Jaffna)

யாழ்நகரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமசாமி செட்டியார் செல்வநாதன் செட்டியார் அவர்கள் நேற்று (20.4.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ரெங்கநாயகி அம்மா அவர்களின் அன்பு கணவரும், காலஞ் சென்றவர்களான பரமசாமி செட்டியார் - ஜயனையம்மாள் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா செட்டியார் - ஜெகதீஸ்வரி, சிதம்பரநாதன் செட்டியார், கதிரேஸ்வரி, நகுலராஜா செட்டியார், அவர்களின் பாசமிகு இளைய சகோதரரும், யசோகுமார் (கனடா ), லலித்குமார் வைத்தியர் (யாழ்), தினேஸ்குமார் (லண்டன்) அவர்களின் பாசமிகு தந்தையாரும், ஹறிசரண்யா (கனடா), திருசாந்தி (யாழ்), சௌமிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சனாஜெசி, கிரிராஜினி, ஹிரித்திகா, ஆயுஸ், ஆதியா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.04.2025) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

103, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 413 2012

(CS/30058) J-1

# 31ஆம் நாள் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (25.03.2025) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த
எங்கள் அன்புத்தெய்வம்

## அமரர் குருசாமி கணேசலிங்கம்

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை 22.03.2025 செவ்வாய்க் கிழமை காலை 07.00 மணிக்கு சாட்டி புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் (24.04. 2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.

(CS/30055) K-1

குடும்பத்தினர்
076 171 9436

# நெல் கொள்வனவுக்காக ரூ.500 மில்லியன்

நெல் கொள்வனவுக்காக 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டி யுள்ளார். பொலநறுவையில் நேற்று நடைபெற்ற மக்கள் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார். நெல் விலையில் மீண்டும் ஒருபோதும் பிரச்சினை ஏற்படாது. விவசாயிகளுக்கு நியாயமான விலையில் நெல் விலையை நிலையாக வைத்திருப்பதே எங்கள் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## பெண் வேலையாட்கள் தேவை

யாழ் நகரிலுள்ள ஐஸ்கிறீம் கடை ஒன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை.

தொடர்பு:- 077 710 7247

## காணி விற்பனைக்கு

மிருசுவில் மற்றும் அல்லாரை தெற்கில் மிருசுவில் A9 வீதிக்கு அருகாமையில் 5பரப்பும் கச்சாய் வீதி அல்லாரை தெற்கில் 2.5 பரப்பும் காணிகள் விற்பனைக்கு உண்டு. வாங்க ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

(CR/0067) S-1

whatsapp/ Viber 0033 770 012099

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்
### பெறுகை அறிவித்தல்
### வெளிவாரி அடிப்படையிலான பாதுகாப்புச்சேவை வழங்கலுக்கான விலைமனுக் கோரல் 2025/2026

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையில் 2025 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்புச் சேவை, வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இல | சேவை | எதிர்பார்க்கப்படும் / தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| NP/14/41(16)/01/OS/01 | பாதுகாப்புச் சேவை | 05 |

1. சேவை வழங்குநர்கள் பாதுகாப்புச் சேவை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 2 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
2. சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
3. சேவை வழங்குநர்கள் பெறுகை ஆவணங்களை வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாயில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 21.04.2025 ஆம் திகதி தொடக்கம் 05.05.2025 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 02.30 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 2000.00 ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
4. பெறுகை ஆவணங்கள் 06.05.2025 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு "தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்" என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பிவைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
5. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழுவிற்கு அதிகாரம் உள்ளது.

தலைவர்,
உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

21.04.2025

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 . 06 . 1938



மறைவு 01 . 05 . 2024

## அமரர் நற்குணராசா மனோன்மணி

திதி - சித்திரை மாத அபர பக்க அட்டமி

நேற்று வரை நீயிருந்த கோயில் ஒளியிழந்து போக
ஆற்றும் வகை அறியாது ஆண்டொன்று போக - எம்மைப்
போற்றும் படி செய்த பொன்னிலவே தாயே!
தேற்ற வழி தெரியாது தேறினோம் அம்மாவே!
போற்றிப்பரவி நிற்கிறோம் ஈசன் தாள் நீயுறைக.

மிசுவால் வடக்கு,
கொடிகாமம்.


(CS/30056) K-1

பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 10 . 08 . 1949



உதிர்வு 18 . 04 . 2025

## இராயப்பு பரமானந்தம் (பஞ்சறட்ணம்)

(உரிமையாளர் - ஆனந்தா ஸ்டோர்ஸ் )

யாழ். சில்லாலையை (St. ஜேம்ஸ் வீதி) பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராயப்பு பரமானந்தம் (பஞ்சறட்ணம்) ஆனந்தா ஸ்டோர்ஸ் உரிமையாளர் அவர்கள் கடந்த 18.04.2025 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராயப்பு, றோசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அல்வீனம்மா (பாபா), வினிவிறேற் (றோஸ்) அவர்களின் அன்பு கணவரும், காலம் சென்ற மேரி திரேசா புஷ்பம், மற்றும் மேரி யோசப்பின் (ராணி), காலம் சென்ற மேரி கில்டா (பேபி), மற்றும் அருட் சகோதரி ஜெம்மா (மலர்) திருச்சிலுவை கன்னியர் மடம், மேரி லீலா அவர்களின் பாசமிகு சகோதரரும், கமில்ரன் அவர்களின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் பிலிப்பையா (ஆசிரியர்), எசாக்கி இம்மானுவேல் (பொலிஸ்), அந்தோனிப்பிள்ளை ஸ்டீபன் (இலங்கை போக்குவரத்து களஞ்சிய பொறுப்பாளர்) மரியாம்பிள்ளை தாசீசியஸ் (கட்டிட ஒப்பந்தக்காரர்) அவர்களின் மைத்துனரும், எல்மோடினேஸ், சுகி அவர்களின் ஞானத் தந்தையும், காலஞ்சென்ற ஜறீன், மற்றும் அன்ரன், டெனி, நொயிலின், அருட்சகோதரி டொறின் (திருகுடும்ப கன்னியர் மடம்), டொறிஸ், பொலின், கிறேஷியன், லைங்ஸ்ரன், (F)வுளோறின், லூமின், கிளிங்ரன், சுஜி, றஜி, ஜெனி, ஜூட்(F)பிளேவியன், (வலய முகாமையாளர் -ஆர்பிகோ இன்சூரன்ஸ் PLC.), ஜெலோன் அவர்களின் அன்பு மாமனாரும், சாந்தி, செல்வராணி, இந்திராணி, ரஞ்சினி, வவி அவர்களின் மைத்துணரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் எதிர்வரும் (25.04.2025) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு St.ஜேம்ஸ் சேமக்காலை பண்டத்தரிப்பில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS/30064) J-1 **தகவல்: குடும்பத்தினர்**



# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 05 . 1965



மறைவு 20 . 04 . 2025

## செல்வி சண்முகதாசன் சாந்தா

கொட்டுடை வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கலட்டி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சண்முகதாசன் சாந்தா அவர்கள் நேற்று (20.04.2025)ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகதாசன் - இராசலட்சுமி தம்பதியரின் இளைய புதல்வியும், சறோஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சிவபாலன் (தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனேஸ்வரன், மங்களேஸ்வரி (சமுர்த்தி உத்தியோகத்தர், தெல்லிப்பளை) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், பவிதா, அபர்ணா ஆகியோரின் சித்தியும், திலக்சனா, திலுக்சிகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ் சென்ற கந்தசாமி மற்றும் மங்கயற்கரசி ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2025) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்
கலட்டி முதலாம் வீதி,
வட்டுக்கோட்டை. (CR/44810) J-1
077 648 3131, 077 494 8278


# 1010 போதை மாத்திரைகளுடன் நுணாவிலில் இளைஞர் கைது!



சாவகச்சேரி, நுணாவிலில் 1010 போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் நேற்று மாலை சாவகச்சேரி பொலிஸ் நிலைய போதைப் பொருள் மற்றும் குற்றச் செயல் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 25 வயதுடையவர் என்றும், இவர் நீண்ட நாள்களாக போதை மாத்திரை விற்பனையில் ஈடுபடுபவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் உப பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய கண்காணிக்கப்பட்டுவந்த சந்தேகநபர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஏ-113-26)

## பிள்ளையானைத் தண்டித்து

# புலம்பெயரிகளைத் திருப்திப்படுத்த ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்

நாமல் ராஜபக்ச கூக்குரல்

கொழும்பு, ஏப். 21

பிள்ளையான் தவறிழைத்திருந்தால் அவருக்குத் தண்டனை வழங்கலாம். ஆனால், புலம்பெயரிகளைத் திருப்திப்படுத்துவதற்காக அவரைத் தண்டிக்க முற்பட்டால் நாங்கள் நிச்சயம் போராடுவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:



பிள்ளையான் கைதுசெய்யப்பட்டமை தொடர்பில் பொலிஸார் ஒரு காரணத்தையும், பாதுகாப்பு அமைச்சர் வேறொரு காரணத்தையும் கூறுகின்றனர். புலம்பெயரி களின் தேவைக்கேற்பவே கருணாவுக்கு பிரிட்டனில் தடைவிதிக்கப் பட்டது. புலிகள் அமைப்பை தோற்கடிப்பதற்கு இராணுவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியதாலேயே அவருக்கு இப்படி நடந்துள்ளது.

அதேபோல புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறி, ஜனநாயக வழிக்கு வந்து புலிகளைத் தோற்கடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பிள்ளையானையும் கைதுசெய்துள்ளனர். வேறு நபர்களின் தேவைக்கேற்பவே பிள்ளையான் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது தெளிவாகின்றது.

பிள்ளையான் செய்த சேவைகள் தொடர்பில் முன்னாள் அமைச்சரும், சட்டத்தரணியுமான கம்மன்பிலவுக்கு தெரியும். கம்மன்பில எமது அணியில் இருந்தவர். எனவே, அவருக்காக கம்மன்பில முன்னிலையானது சரியான முடிவே-என்றார். (ம-44)

# இஸ்ரேல் இல்லை பலஸ்தீனமே தடுமாறிய ஆளுங்கட்சி எம்.பி.

கொழும்பு, ஏப். 21

இஸ்ரேலுக்கு ஆதரவாக அடிக்கடி ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் நாங்கள்தான் என தான் தவறுதலாகக் குறிப்பிட்டதாக தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ . ஆதம்பாவா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பலஸ்தீனத்துக்குப் பதிலாகவே இஸ்ரேல் என்று தவறுதலாகச் சொல்லிவிட்டேன். மனிதன் என்ற வகையில் சில சமயங்களில் வாய்தவறிப் பேசுவது வழமை.

தினமும் 5000 க்கும் மேற்பட்ட சொற்களை நாம் பாவிக்கின்றபோது சில தடக்கங்கள் வரும்.

எனினும் சிலர் எனது கருத்தைப் பிரதி செய்து போலியான பரப்புரைகளை மேற்கொள்கின்றனர். இது சேறுபூசும் செயற்பாடாகும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் தங்கியிருந்தாராம்; கட்டடத்துக்குத் தீ வைத்த நபர்!

மஹரகம நகரின் மையப்பகுதியில் உள்ள கட்டடம் ஒன்றின் பாதுகாப்பு நிலையம் தீ வைக்கப்பட்டு எரிக்கப்பட்டிருந்தநிலையில், தீ வைத்தவர் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் அங்கு தங்கியிருந்தார் என்பதாலேயே தீ வைத்தேன் என்று கூறிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளவர் மாத்தறைப் பிரதேசத் தைச் சேர்ந்த 32 வயதானவர் என்றும், அந்தக் கட்டடத்தின் பாதுகாப்பு அதிகாரி என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மஹரகம நகரின் மையப் பகுதியில் உள்ள ஒரு தனியார் வங்கி உட்பட பல நிறுவனங்களைக் கொண்ட கட்டத்தின் பாதுகாப்பு நிலையமே நேற்றுமுன்தினம் தீ வைக்கப்பட்டுள்ளது. விடுமுறை நாள் என்பதால் அந்தக் கட்டடத்தில் இயங்கிய நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன என்றும், பாதுகாப்புக்காக இந்த நபர் மட்டுமே கட்டத்தில் தங்கிருந்தார் என்றும் கூறப்படுகின்றது. பாதுகாப்பு உத்தியோகத்தர் தங்கிக் கடமையில் ஈடுபடும் பாதுகாப்பு நிலையமே தீ வைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்த படுக்கை, ஒரு மேசை, நாற்காலி, பல புத்தகங்கள், பாதுகாப்பு உத்தியோகத்தரின் துணிகள் என்பன எரிந்து நாசமாகியுள்ளன.

சம்பவத்தை அடுத்து கோட்டை தீயணைப்புப் பிரிவு சம்பவ இடத்துக்குச் சென்று தீயைக் கட்டுப்படுத்தியுள்ளது. சந்தேகநபரைக் கைது செய்து விசாரித்தபோது அவர் அளவுக்கதிமாக போதைப் பொருள் உட்கொண்டிருந்தமையும், சுயநினைவற்ற நிலையில் நடந்துகொண்டமையும் தெரியவந்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் தங்கியிருந்தாலேயே பாதுகாப்பு நிலையத்துக்கு தீ வைத்தேன் என்று அவர் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தப்பட்டு, மருத்துவ அறிக்கை பெற்றுக்கொண்ட பின்னர் பொலிஸாரால் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்று கொழும்பு இணைய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (எ-இ)


## மரண அறிவித்தல்

### திருமதி செல்வராசா பத்தினிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற குடும்பநல உத்தியோகத்தர்- யாழ்.போதனா வைத்தியசாலை)



சின்னப்பா வீதி, நவாலி கிழக்கு, மானிப்பாயைச் சேர்ந்த திருமதி செல்வராசா பத்தினிப்பிள்ளை (ஓய்வுபெற்ற குடும்பநல உத்தியோகத்தர்- யாழ். போதனா வைத்தியசாலை) அவர்கள் 19.04.2025 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை செல்வராசாவின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான தவராஜா, ஜெயராஜா மற்றும் விஜயராஜா, கலாநிதி பத்மராஜா, பேராசிரியர் மோகனராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவகுமாரி, றெஜினா, Dr. மேரி லோறன்சியா மற்றும் காலஞ்சென்ற தேவலோஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரதீபா, கெற்சி, கோபிகா, கிறிஷோ, கிறிஸ்ரினா, லிடியா, டியான், Dr.கிறேசியன், கிரிசாந், அர்ச்சனா, மாதங்கி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் எரோன் டானியலின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க வழிபாடு 22.04.2025 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நவாலி அமெரிக்கன் இலங்கை மிசன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
Dr.S. பத்மராஜா, (மகன்)


# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரி ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கமே!

## மைத்திரிபால தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி ஐ.எஸ் இயக்கமே என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி அலைவரிசையொன்றின் செய்திக்கான நேர்காணலின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜே.ஆர். காலம் தொட்டு மஹிந்த ராஜபக்ச ஆட்சிக்காலம் வரை இந்நாட்டில் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலும் அதுபோன்ற ஒரு சம்பவமே. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக எனக்குத் தெரிந்த விடயங்களை நான் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் தெரிவித்துள்ளேன். அவற்றை வெளியிடுவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி ஐ.எஸ். இயக்கமே யாகும். அமெரிக்காவின் சீ.ஐ.ஏ உளவுப் பிரிவும் அதனை உறுதி செய்துள்ளது.

கருணா, பிள்ளையான் போன்றோர் கடந்த காலங்களில் சிங்கள பௌத்தர்களை, பௌத்த பிக்குகளைப் படுகொலை செய்தவர்கள். அவர்களுக்கு எனது ஆட்சிக்காலத்தில் எந்தவொரு அமைச்சுப் பதவியும் வழங்கப்படவில்லை – என்றார். (ச-இ)


## மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 09 . 1944

மறைவு 20 . 04 . 2025

### பத்மலீலாதேவி கந்தசாமி

பழைய சந்தை, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பத்மலீலாதேவி கந்தசாமி அவர்கள் நேற்று (20.04.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - மனோன்மணி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமி (ஓய்வு பெற்ற நடத்துனர்- CTB) அவர்களின் அன்பு மனைவியும், குகதாசன், ஜெனனி (ஆசிரியை யா/ வைத்தீஸ்வரா கல்லூரி), தயாபரன், கோகுலன், வாசுகி (ஆசிரியை யா/ இந்து மகளிர் கல்லூரி ) ஆகியோரின் அன்புத் தாயாரும், துற்ஜெயந்தி, செந்தில்குமரன் (அதிபர் யா/ திருநெல்வேலி றோ.க.த.க பாடசாலை), சிவராணி (பருத்தித் துறை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், பரமேஸ்வரி, சரஸ்வதி, மகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற முத்துராஜா, மற்றும் இராஜேஸ்வரன், பவானி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், சஜீவன், சங்கவி, தஜீவன் ஆகியோரின் பேத்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS/30061) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 22 . 07 . 1945

மறைவு 20 . 04 . 2025

### நடராசா இராசேந்திரா

(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
நீர்ப்பாசன திணைக்களம் )

சங்கரத்தை வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் கல்லை வேம்படி சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா இராசேந்திரா அவர்கள் நேற்று (20.04.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - பத்மாவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துகுமாரு - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தவராசா, ராஜராணி, மற்றும் லலிதாம்பிகையின் (ஓய்வு பெற்ற விஞ்ஞான ஆசிரியை) அன்புச் சகோதரனும், பேராசிரியர். வைத்திய கலாநிதி சுரேந்திரகுமாரன் (பீடாதிபதி, மருத்துவ பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), செந்தில்குமரன் (Supervisor, Built Element ltd- colombo), சுஜாதா (கொழும்பு), மீரா (பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரேணுகா (நிர்வாக உத்தியோகத்தர், IMS மானிப்பாய்), சுதர்சன் (ஆசிரியர், யா/ விக்னேஸ்வரா கல்லூரி, கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிநவன், அப்சரா, அருந்திகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2025) திங்கட்கிழமை முற்பகல் 08.30 மணியளவில் அவரது இல்லத்தில் (இல. 10 வைமன் வீதி, நல்லூர் எனும் முகவரியில்) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல. 10 வைமன் வீதி,
நல்லூர்.

தகவல் : குடும்பத்தினர்
077 744 8080, 077 388 5233

(CS/30060) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரத்தைக்...

பொலநறுவையில் நேற்று நடத்திய மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- கடந்த ஐந்தரை ஆண்டுகளாக விசாரணை என்ற போர்வையில் தாக்குதலுடன் தொடர்புடையவர்களின் தகவல்களை மறைக்கும் முயற்சிகளே மேற்கொள்ளப்பட்டன. 2019ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கத்துக்கோ, அதைத் தொடர்ந்து வந்த அரசாங்கத்துக்கோ இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய சூத்திரதாரிகளைச் சட்டத்தின் முன் கொண்டுவருவதற்கான நோக்கம் இருக்கவில்லை. நாம் ஆட்சிக்கு வந்து 6 மாதங்களே ஆகியுள்ளபோதும், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடன் தொடர்புடைய மற்றும் பொறுப்புக்கூறவேண்டியவர்களைச்சட்டத்தின்முன்நிறுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளைப் படிப்படியாக முன்னெடுத்தோம் - என்றார். (அ-எ-இ)

## தவறான...

வயதான ஒருவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 18ஆம் திகதி தவறான முடிவெடுத்து உயிரை மாய்க்க முயன்ற இவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அங்கு சிகிச்சை பெற்றுவந்த அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## குற்றப்புலனாய்வுப்...

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையும், ஆவணங்கள் அடங்கிய தொகுதிகளும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறுப் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விடயங்களை விசாரிக்க குற்றப்புலனாய்வுப் பிரிவின் சிறப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் ஆறாம் ஆண்டு நிறைவில், இந்த மிலேச்சத்தனமான தாக்குதல் தொடர்பாக சுயாதீனமான மற்றும்பாரபட்சமற்ற விசாரணையை உறுதி செய்வதில் அரசாங்கம் வெற்றிபெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும், ஜனாதிபதியின் அறிவுறுத்தலின்படி உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் துரிதகதியில் புதிய திசையில் முன்னெடுக்கப்பட்டன. இந்தக் குற்றத்தைக் கால ஓட்டத்தில் மறைந்து விடாமல், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வழங்கியுள்ளார் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## உள்ளூராட்சித்...

அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி, இந்த நிலைமையால் வாக்களிப்பு வீதம் குறைவதற்கான சாத்தியங்கள் உள்ளன என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஏனைய தேர்தல்களைப் போலன்றி, உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிப்பு வீதம் பொதுவாக 50 முதல் 60 வீதம் வரையில் இருக்கும். விரிவான தேர்தல் பரப்புரைகள் இன்மை, தேர்தல் பரப்புரைப் பொருள்களைக் காட்சிப்படுத்தாமை, வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அதிகளவில் கூடாமை தேர்தல் உற்சாகமின்மைக்கு முக்கியமான காரணங்களாகும்.

தேர்தல் நெருங்கும்போது உற்சாகம் ஓரளவு அதிகரிக்கலாம். உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரைகள் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து பாரதூரமான சம்பவங்கள் எவையும் பதிவாகவில்லை. உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நாளில் நாடு முழுவதும் சுமார் 4 ஆயிரம் கண்காணிப்பாளர்கள் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் - என்றார். (அ-எ-இ)

## நிகழ்நிலைக்...

மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில், அது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டத்துக்குப் பதிலாக புதிய சட்டவரைவு கொண்டுவரப்படும் என்ற வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. (அ-எ-6)

## வேட்பு...

சபை, நல்லூர் பிரதேசசபை ஆகிய உள்ளூராட்சி சபைகளில் வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை தொடர்பாகவே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்குகள் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள நிலையில், இந்த வழக்குகள் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பு இன்றே வெளியாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-எ-26)

## பெண் வேடமிட்ட...

ஆலயம் ஒன்றில் நேற்றுத் தேர்த்திருவிழா நடைபெற்றது. திருவிழாவுக்கு வந்திருந்த பக்தர்களின் சுமார் 4 பவுண் பெறுமதியுடைய சங்கிலிகள் கூட்ட நெரிசலைப் பயன்படுத்தி அறுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாகக் கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், ஆலயச் சூழலில் சந்தேகத்துக்கு இடமாக [illegible] கைதுசெய்து[illegible] ஒருவர் பெண் வேடமணிந்த ஆண் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நால்வரும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுவருகின்றனர். கைதுசெய்யப்பட்டுள்ளவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-26)

## ஈஸ்டர்...

தில் மூன்று தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர விடுதிகளில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இந்தத் தாக்குதலில் 260க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதுடன் பல நூற்றுக்கணக்கானவர்கள் காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

இந்தத் தாக்குலில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் நாடு முழுவதும் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. காலை 8.45 மணிக்கு அனைத்து மதத் தலங்களிலும் மணிகள் ஒலிக்கப்பட்டு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று காலை 7 மணிக்கு கொட்டாஞ்சேனை புனித லூசியாஸ் பேராலயத்தில் இருந்து பிரார்த்தனை ஊர்வலம் ஆரம்பமாகி, கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தைச் சென்றடையவுள்ளது. காலை 8.30 மணிக்கு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தலைமையில் விசேட நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. அதேவேளை கொடூரத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் நாடு முழுவதும் உள்ள தேவாலயங்களில் விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (அ-எ-இ)

## தும்பளையில்...

வசித்துவந்த செம்பியன்பற்றைச் சேர்ந்த சின்னத்தம்பி குணதேவி (வயது-69) என்பவரே அடித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார். தலையில் பலமுறை தாக்கப்பட்டமையாலேயே அவர் உயிரிழந்துள்ளார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுநிலை ஆசிரியையான சகோதரியுடன் குணதேவி ஒரே வீட்டில் வசிந்து வந்துள்ளார். உயிர்த்த ஞாயிறு தினமான நேற்றுக் காலை 7 மணியளவில் சகோதரி அருகில் உள்ள தேவாலயத்துக்குச் சென்றுள்ளார். உடல்நலக் குறைவு காரணமாக குணதேவி தேவாலயத்துக்குச் செல்லவில்லை. தேவாலயத்தில் இருந்து சகோதரி காலை 9 மணியளவில் வீடு திரும்பியபோது குணதேவி வீட்டின் சமையலறையில் இரத்தவெள்ளத்தில் வீழ்ந்து கிடந்துள்ளார்.

சம்பவம் அறிந்து அயலவர்கள் கூடிய நிலையில், மருத்துவமனைக்குக் கொண்டுசெல்வதற்காக அவர்கள் குணதேவியை சமையலறையில் இருந்து வெளியே கொண்டுவந்தனர். அம்புலன்ஸுக்கு அறிவித்திருந்த நிலையில், அம்புலன்ஸில் வந்த மருத்துவ உத்தியோகத்தர் குணதேவி ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்பதை உறுதிப்படுத்தினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பருத்தித்துறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்துக்கு வந்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். இந்த வீட்டில் முன்னர் ஆள்கள் இல்லாத போது கைத்தொலைபேசி ஒன்று திருடப்பட்டிருந்தது என்பதும், இது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதும் விசாரணைகளில் தெரிய வந்தது.

அதை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சந்தேகநபர் ஒருவரை இனங்கண்டனர். அந்த நபர் தும்பளை, மணல் ஒழுங்கையில் வைத்துப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் முதலில் மறுத்தாலும் பின்னர் மூதாட்டியைக் கொலைசெய்ததை ஒப்புக்கொண்டார் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வீட்டில் எவரும் இருக்கமாட்டார்கள் என்ற எண்ணத்தில் திருடுவதற்காக சந்தேகநபர் சுவர் ஏறிக்குதித்துச் சென்றுள்ளார். எதிர்பாராத விதமாக சமையலறையில் மூதாட்டியைக் கண்டதும், அங்கிருந்த பீப்பை கட்டை ஒன்றால் மூதாட்டியைத் தாக்கிவிட்டுத் தப்பிச்சென்றுள்ளார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்றும், அதனால் புனர்வாழ்வு நிலையத்தில் சிகிச்சை பெற்றுத் திரும்பியவர் என்றும், இவர் மீது ஏற்கனவே பல்வேறு திருட்டுக் குற்றச்சாட்டுகள் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-26-100)

## மறிக்கமறிக்க...

விரோத மணல் கைப்பற்றப்பட்ட நிலையில், சாரதி மற்றும் உதவியாளர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது. சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அடம்பன் பொலிஸார் டிப்பர் வாகனத்தை நிறுத்துமாறு சமிக்ஞை காட்டியுள்ளனர். ஆயினும் டிப்பர் வாகனச் சாரதி வாகனத்தை நிறுத்தாமல் ஆபத்தான முறையில் பயணித்தபோது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தி டிப்பர் வாகனத்தைத் தடுத்துநிறுத்தியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சன்னார் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்த பொலிஸார் சந்தேகநபர்கள் சான்றுப் பொருள்களுடன் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தனர்.

இந்தசம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் அடம்பன் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அதேவேளை, அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அரச மற்றும் தனியார் காணிகளில் தொடர்ச்சியாகச் சட்டவிரோதமாக மணல் அகழ்வு நடைபெற்றுவருகின்றது என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (அ-எ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகத்தின் தாயே அன்னை பூபதி!

பா.அரியநேந்திரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஏப். 21
அன்னை பூபதி விடுதலைப்புலிகளின் உறுப்பினர் இல்லை. அவர் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணி உறுப்பினர். இந்தியப்படையின் இழிசெயலை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாகத்தாய் இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பா.அரியநேந்திரன் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,
அன்னை பூபதி விடுதலைப்புலிகளின் உறுப்பினர் என்றும் அவரை அஞ்சலிப்பது விடுதலைப்புலிகளின் மீளுருவாக்கத்துக்கு வழிவகுக்கும் என்றும் தெரிவித்துப் பொலிஸாரால் அன்னைபூபதியின் நினைவேந்தலுக்கு மட்டக்களப்பில் தடையுத்தரவு பிறக்கப்பட்டது.

அன்னை பூபதி விடுதலைப்புலிகளின் உறுப்பினர் இல்லை. அவர் இந்தியப்படையின் இழி செயலை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாகத்தாய்.

அவரின் தியாகத்தை கொச்சைப்படுத்தி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டமை கண்டிக்கத்தக்கது. அன்னைபூபதி அவரின் குடும்பத்துக்காக உயிர் நீக்கவில்லை ஒட்டுமொத்த தமிழினத்தின் விடுதலைக்காக உயிர் நீத்தார் - என்றார். (ச-33,125)


## வீடு வாடகைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 300 M தூரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய வீடு குறுகியகாலத்திற்கு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
**071 443 2989**

## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS/57780) J-1

தொடர்பு:-
Whatsapp:- **0044 740 537 3526**




## இஸ்ரேலின் தாக்குதலில் பெண் பத்திரிகையாளர் பலி

இஸ்ரேல், ஏப். 21
இஸ்ரேல் - ஹமாஸ்போரின் விளைவுகளை புகைப்படங்களின் மூலம் உலகுக்குக் காட்டிய காஸாவைச் சேர்ந்த புகைப்படப் பத்திரிகையாளர் பாத்திமா ஹசௌனா இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

பாத்திமாவுக்கு இன்னும் சில நாள்களில் திருமணம் நடைபெற இருந்த நிலையில், இந்த சோக சம்பவம் நிகழ்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்குக் காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பாத்திமா மற்றும் அவரின் குடும்பத்தினர் 10 பேரும் உயிரிழந்துள்ளனர். இதில் அவரின் கர்ப்பமான சகோதரியும் அடங்குகிறார்.

இந்தநிலையில் "நான் ஒரு செய்தியாக இருக்க விரும்பவில்லை. எனது மரணம் உலகத்திற்கே கேட்கும்படியும், காலத்திற்கும் நிலைத்திருக்கும் படியும் இருக்க விரும்புகிறேன்" என பாத்திமா ஒரு முறை தனது இணையத்தில் பதிவிட்டதைப் பலரும் நினைவுகூர்ந்துவருகின்றனர். (ச-இ)


## அறிவித்தல்

அம்பிகை அடியார்களே!

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி ஆலயத்தில் கடந்த 16.04.2025 (புதன் கிழமை) திகதியன்று கமல்ராஜ் குருக்களால் நடாத்தப்பட்ட பாலஸ்தாபன கிரியைகளுக்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதனை அறியத்தருவதுடன் ஆலயத்தின் ஏனைய இரு தர்மகர்த்தாவாகிய எம்மிடம் அனுமதியோ சம்மதமோ பெற்றுக்கொள்ளாமல் தன்னிச்சையாக பாலஸ்தாபனம் செய்யப்பட்டது.

மேலும் இவ் ஆலயத்தின் நிர்வாகம் தொடர்பாக மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் நம்பிக்கை சொத்து 67/2023 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது. ஆலயத்தின் திருப்பணி தொடர்பில் நிதியோ பொருட்களோ சேகரிப்பதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதையும் இத்தால் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்
செ.பராசக்தி
ஆலயதர்மகர்த்தா
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன்
தேவஸ்தானம், யாழ்ப்பாணம்

நா.சிவதர்மக்குருக்கள்
அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி
அம்மன்கோயில்
ஆதீனகர்த்தாவும்
பிரதமகுருவும்.

## மரண அறிவித்தல்

பிறப்பு
18
04
1948



இறப்பு
20
04
2025

### சாலினி சுந்தரமூர்த்தி

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், இல.50 அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாலினி சுந்தரமூர்த்தி அவர்கள் நேற்று (20.04.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (ஓய்வு பெற்ற அதிபர்) - சோமவதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற மயில்வாகனம் (ஓய்வு பெற்ற அதிபர்) - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி (கணக்காளர்) அவர்களின் பாசமிகு துணைவியாரும், தேவன் இளங்கோ (London), கௌரி (வசந்தா), திருமகள் (மீரா), காலஞ்சென்ற சூலபாணி, மன்றுளாடி (வவுனியா) மற்றும் காலஞ்சென்ற மாலினி (மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், யோகலட்சுமி (லண்டன்), காலஞ்சென்ற சச்சிதானந்தன், தேவிகா (ஓய்வு பெற்ற ஆசிரியர்), ராஜினி (ஆசிரியை - வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்), பாஸ்கரன், சபாபதி (நோர்வே), பார்வதி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், இராஜலிங்கம் ஆகியோரின் பாசமிகு மருமகளும், வேதவதியின் அன்பு பெறாமகளும், விசாகியின் பாசமிகு பெரியம்மாவும், விஷ்ணுவர்தனனின் (LOLC) மாமியும், சாரங்கன் - அபிராமி, சயந்தினி, அபிரிகா, அபிஷகன், மயுரிகா - கௌதமன், லக்ஷிகன் ஆகியோரின் பாசமிகு அத்தையும், தஷ்விகன், விஷ்ணு ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல் : குடும்பத்தினர்**

இல, 50அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

மன்றுளாடி - 077 328 7717
தேவன் இளங்கோ - +44 781 025 1682
மீரா - 075 046 8921

(CS/30015) J-1

## புதுக்கடைத் திறப்பு விழா

யாழ்ப்பாணத்தில்

கோழிகள், முட்டைகள் மலிவு விலையில் வாடிக்கையாளர்கள் நலன் கருதி எமது நிறுவனம் அடுத்த தினம்தோறும் திறக்கப்படுகிறது.

விலை விபரம்:
- புரோயிலர் இறைச்சி - 950/-
- கல்பேட் இறைச்சி - 950/-
- பேரன்ஸ் இறைச்சி - 1100/-
- ஊர்சேவல் - 1300/-
- முட்டை 1 - 25/-

இவை அனைத்தும் எம்மிடம் எப்போதும் மலிவு விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை அறியத் தருகின்றோம்.

நியூ சிற்றி கோழிக்கடை
பொம்மைவெளி, காரைநகர் வீதி, யாழ்ப்பாணம்.
**077 468 3354**


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மின்னஞ்சல் : news@uthayan.com விளம்பர மின்னஞ்சல்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] உள்ள அவர்களது பணிமனையில் 21.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org